# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2320/42 - 2023 පෙබරවාරි මස 22 වැනි බදාදා - 2023.02.22

*2320/42 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 16 (2ஈ) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

*மன்னார் தம்பவனி காற்றுச் சக்தி செயற்றிட்டத்தின் கொள்ளவை மேம்படுத்தல் - (1 ஆம் கட்டம் விரிவாக்கம்) சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை*

*1988 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் மூலம் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாக பத்தரமுல்ல, பெலவத்த, புதிய பாராளுமன்ற வீதி, இல. 754 எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபையினால் சமர்ப்பிக்கப்படும் மன்னார் தம்பவனி காற்றுச் சக்தி செயற்றிட்டத்தின் கொள்ளளவை மேம்படுத்துவதற்கான 1 ஆம் கட்ட விரிவாக்கல் செயற்றிட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பொதுமக்களின் பரிசீலனைக்காக கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் நாள் முழுவதும் முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 4.15 மணி வரை 2023.02.22 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்கு வைக்கப்பட்டிருக்கும். (வார இறுதி மற்றும் அரச விடுமுறை நாட்களைத் தவிர.)*

*இதற்கு மேலதிகமாக கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணைய தளமான* www.coastal.gov.lk *இல் மும்மொழிகளிலும் தரப்பட்டுள்ளது.*

| | | | |
|---|---|---|---|
| *01* | *நகர அபிவிருத்தி மற்றும் வீட்டு அமைச்சு* | - | *7 ஆவது மாடி, "சுகுறுபாய" பத்தரமுல்ல,* |
| *02* | *கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்* | - | *புதிய செயலகம், 4 ஆவது மாடி, மாளிகாவத்த, கொழும்பு 10.* |
| *03* | *மத்திய சுற்றாடல் அதிகார சபை* | - | *இல. 104, "பரிசர பியச" டென்சில் கொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல.* |

| | | | |
|---|---|---|---|
| 04 | வனவிலங்குகள் பாதுகாப்பு திணைக்களம் | - | இல. 811/A, ஜயந்திபுர மாவத்தை, பத்தரமுல்ல. |
| 05 | மாவட்ட செயலாளர் அலுவலகம் | - | மன்னார் |
| 06 | பிரதேச செயலாளர் அலுவலகம் | - | வெல்ல வீதி, மன்னர் |
| 07 | மாநகர சபை | - | மன்னார் |
| 08 | பிரதேச செயலகம் | - | மன்னார் |
| 09 | கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம் | - | மாவட்ட அலுவலகம், மன்னார் |

இந்த உத்தேச செயற்றிட்டத்தினால் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பான அறிக்கை சம்பந்தமாக பொதுமக்களின் கருத்துக்களை 2023.02.22 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்குள் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு எழுத்து மூலமாகச் சமர்ப்பிக்குமாறு அறியத்தருகிறேன்.

பொறியியலாளர் **ஆர். ஏ. எஸ். ரணவக்க,**
பணிப்பாளர் நாயகம்.

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்,
4 ஆவது மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை,
கொழும்பு 10,
தொலைபேசி இல. 011 -2449754, 011- 2387922, 011-2449197
தொலைநகல் இல. 011 -2438005, 011-2472623.

EOG 02 - 0233